1995 ஏப்ரல் 20]

ஏற்று, இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இதற்கான கட்டிடம் கட்டுவதற்கான வேலைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அதே நேரத்தில், மன்னார்குடி நகரத்திலே, நாகை மாவட்டத்திலே, நாகை நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிலே மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மன்னார்குடி பொது மருத்துவமனையில் இடவசதி இல்லாததால், வேறு புதிய இடத்திலே புதிய வளாகம் கட்டிக் கொடுக்கப்படும் என்கின்ற ஆணையை பிறப்பித்து உடனடியாக வேலைகள் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆகையால், அந்த வேலை எந்த நிலைமையிலே இருக்கிறது, பணிகள் தொடங்கப்படுமா, எப்போது தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வேறு ஒரு மருத்துவமனையினுடைய விளக்கத்தை அவர்கள் கேட்கிறார்கள். அதற்கான குறிப்பு தற்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டாலோ அல்லது நேரிடையாகவோ அவருக்கு அந்த விளக்கங்கள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *365*, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

365—

மகப்பேற்றுப் பெண்களுக்கு மருத்துவ சிகிச்சை

**22619*—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் மகப்பேற்றுக்கு வரும் பெண்களுக்கு "Re-assurance and Psycho-Prophylactic Approach" என்ற மருத்துவ சிகிச்சை முறையை தீவிரப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

மகப்பேறு சிகிச்சைப் பிரிவிற்கு வரும் கருவுற்ற தாய்மார்களுக்கு,

மகப்பேறு பற்றிய தகுந்த கல்வியறிவும், சுகப்பிரசவம் பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. தேவைப்பட்டால், உள் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு தேவையான ஆலோசனையும், சிகிச்சையும் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–20

டாக்டர். அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் படைப்பில் மனிதனுடைய பார்வையில் வசீகரம் இருக்கிறது. மனிதனுடைய பேச்சில் வசீகரம் இருக்கிறது. மனிதனுடைய சிரிப்பில் வசீகரம் இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டுதான் கருவுற்ற தாய்மார்களுக்கு அரசு மருத்துவமனைகளுக்கு வருகின்றபோது, பிரசவ வலி ஏற்படுகின்ற நேரங்களில் தன் அருமை கணவரும், தன் அன்புத்தாயும், தான் ஈன்றெடுக்கும் மழலைச் செல்வத்திற்கு சிகிச்சை அளித்து வருகின்ற பெண் மருத்துவரும், குழந்தைகள் மருத்துவரும், மயக்க மருந்து மருத்துவரும் ஆகிய குழுவை வைத்து அந்த கருவுற்ற தாய்க்கு, மன நிம்மதியையும் மன தைரியத்தையும், கொடுக்கின்ற சமயத்தில், பிரசவம், பிரசவத்தால் ஏற்படும் பின் விளைவுகள், பிரசவத்திற்குப் பின்னால் ஏற்படும் பின்விளைவுகளை கணிசமாகக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே தான் "Re-assurance and Psycho-Prophylactic Approach" என்ற ஒரு முறை அரசாங்க மருத்துவமனைகளில் தீவிரப்படுத்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஆராய்ந்து இதற்குரிய பதில் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான ஒரு தனி திட்டமாகவோ அல்லது இப்படிச் செய்ய வேண்டும் என்ற உத்தரவோ தனிப்பட்ட முறையிலே எதுவும் இதுவரை அரசாங்க மருத்துவர்களுக்கோ அல்லது அரசாங்க மருத்துவமனைகளுக்கோ நாம் கொடுக்கவில்லை. இருந்தாலும்கூட, இதுபோல எந்த நோயாளியாக இருந்தாலும் சரி, பிரசவத்திற்காக வருகின்ற நோயாளிகளாக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி, நோயாளிகளாக வரக்கூடியவர்களுக்கு கூட மருத்துவர்கள் தேவையான அறிவுரைகள் வழங்குகின்றார்கள். அவர்களுக்கு தைரியத்தைச் சொல்கிறார்கள். எனவே அப்படி பிரசவத்திற்காக வருகின்ற தாயமார்கள் பயத்தோடு இருக்கின்றபோது யாரெல்லாம் அவர் இங்கே குறிப்பிட்டாரோ, அவருடைய பெற்றோர்களோ அல்லது அவருடைய கணவனையோ நேராக வைத்து இதிலே எந்தப்

1995 ஏப்ரல் 20]

பிரச்சினையும் இல்லை என்று சொல்வதற்கு மருத்துவர்கள் தயங்குவது இல்லை. அந்த நடவடிக்கையை இப்போது எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கான உத்தரவு இல்லை என்றாலும் அவர்கள் அதை கடமையாக ஏற்றுக்கொண்டு செய்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே எங்காவது குறைபாடு இருந்தால் அதை நிவர்த்தி செயவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். குழந்தைகள் மருத்துவமனை மருத்துவர்களை அழைப்பது என்பது தேவைக்கு ஏற்ப செய்கிறார்கள். எல்லா தாய்மார்களுக்கும், அவர்களை அழைத்து பார்ப்பது இல்லை. தேவைக்கு ஏற்ப அவசியம் இருந்தால் அழைத்து அவர்களை வைத்து ஒரு கௌன்சிலிங் செய்கிறார்கள். இதெல்லாம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. எனவே இதை இன்னும் தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம். சில நேரங்களிலே கணவன்மார்கள் வரலாமா இல்லையா என்பதை அவர்கள் முடிவு செய்ய வேணடும். அவர்கள் வர வேண்டாம் என்று கூட சில பேர் நினைப்பார்கள். பிரச்சினைகூட இருக்கலாம். அப்படியெல்லாம் இருகின்றபோது அந்தத் தாய்மார்கள் எப்படி எதிர்பார்க்கிறார்களோ அப்படி நாம் செய்யலாம்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தமிழ்நாட்டில் அரசாங்கத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற மருத்துவமனைகளில் மிகச் சிறப்பாக அந்த மருத்துவ சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. ஆனால் இதை தனியார் மருத்துவமனைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, அந்த தனியார் மருத்துவமனைகளில் எல்லா பிரிவுகளுக்குமுண்டான மருத்துவர்கள் ஒரே சமயத்தில் கிடைப்பது இல்லை. ஆனால் அரசாங்க மருத்துவமனைகளில் எவ்விரிதிங் அண்டர் ஒன் ரூஃப் என்ற முறையில் எந்த ஒரு பிரிவைச் சேர்ந்த டாக்டர்களும் அங்கே உடனுக்குடன் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆனால் இந்த ரீ–அஷ்யூரன்ஸ் என்று சொல்லப்படுகின்ற முறை அரசாங்க மருத்துவமனைகளில் சற்று குறைவாக இருக்கிறது. தனியார் மருத்துவமனைகளில் சற்று அதிகமாக இருக்கிறது. இதுதான் இப்போது இருக்கின்ற நிலைமை. எனவே இந்த ரீ-அஷ்யூரன்ஸ் முறையை நம்முடைய அரசாங்க மருத்துவமனைகளில் நாம் மேம்படுத்துவோமேயானால் நம்முடைய அரசாங்கத்தினுடைய மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய இந்த சிகிச்சை முறை மிகவும் சீராக இருக்கும். எனவே அமைச்சர் அவர்கள் இதை ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[*1995 ஏப்ரல் 20*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையை பொறுத்தவரை மருத்துவர்கள் அனைவரும் அங்கே இருக்கிறார்கள். ஒரே இடத்திலே உடனடியாக அவர்கள் கூடி பேசுவதற்கோ, முடிவு எடுப்பதற்கோ சுலபமாக இருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே இங்கே வரக்கூடியவர்களுடைய எண்ணிக்கை அதிகம். அதையும் நாம் மனதிலே வைத்து பார்க்க வேண்டும். அது ஓ.பி.யாக இருந்தாலும் சரி, இன்-பேஷண்டாக இருந்தாலும் சரி, ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான டெலிவரிகள் ஆகிறது என்று நமக்கு கணக்கு சொல்கிறார்கள். அத்தனை டெலிவரிகளில் பெரும் பகுதி நூற்றுக்கு தொண்ணூறு சதவிகிதம் இரவு நேரத்திலேதான் ஆகிறது. இப்படிப்பட்ட நேரத்திலே அவர்களுடைய வொர்க்லோடு அதிகம் ஆகிறது. எனவேதான் அவர்கள் அதற்கான அதிக நேரத்தை தனியார் துறையைப் போல ஒதுக்க முடியாது. இருந்தாலும்கூட அந்தத் தாய்மார்கள் திடீரென்று பிரசவத்திற்கான அந்த நேரத்திலே மட்டும் வருவதில்லை. அவர்கள் ஆரம்பத்திலிருந்தே, கருவுற்ற நேரத்திலிருந்தே வருகிறார்கள். எனவே, கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்கு அந்தத் தைரியம் கொடுக்கப்படுகிறது. இந்த கௌன்சிலிங் என்பது அல்லது அவர்களுக்கு தைரியம் ஊட்டக்கூடிய இந்த ரீ-அஷ்யூரன்ஸ் என்பது அந்த பிரசவ நேரத்திலே மட்டும் அல்ல. ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு முறையும் அவர்கள் செக்-அப்புக்காக வருகின்றபோது இதை செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இதிலே ஒரு பெரிய மாற்றத்தை நாம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது. இது அந்த மருத்துவர்களுடைய கடமை. அவர்கள் படிக்கின்றபோதே இதற்கெல்லாம் சேர்த்துத்தான் படித்துவிட்டு வருகிறார்கள். இதையெல்லாம் செய்ய வேண்டுமென்பது அவர்களுடைய கடமை. அதை அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். குறைபாடு ஏற்படுகின்ற இடத்திலே இதை நிவர்த்தி செய்வதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: பேரவைத் தலைவர் அவர்களே, "Re-assurance and Psycho-Prophylactic Approach" என்பது கருவுற்ற தாய்மார்களுக்கு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்துள்ள இவ்வரசு மருத்துவமனைகளில் சோஷியல் வொர்க்கர்கள் பணிபுரிவதால் அவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தி இந்த ரீ அஷ்யூரன்ஸை மேலும் தீவிரப்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 20]

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோசியல் ஒர்க்கர்ஸ் இப்போது எங்கெங்கே பணியாற்றுகிறார்களோ அவர்கள் இந்தப் பணியில் ஈடுபடுகிறார்கள். அதை இன்னும் வரைமுறைப்படுத்துவதற்கு இன்னும் அதை தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். ஏற்கெனவே இதற்கான அமைப்புகள், முறைகள் இருக்கின்றன. எனவே, அதை தீவிரப்படுத்துவதற்கான ஏற்பாட்டை வேண்டுமானாலும் அரசாங்கம் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Re-assurance and Psycho-Prophylactic Approach என்பது இங்கே மகப்பேறு பெண்களுக்கு மருத்துவ சிகிச்சை என்ற தலைப்பில் வருகிறது. கருவுற்ற பெண்களுக்கு தீர்க்க முடியாத சில நோய்கள் உண்டு. உதாரணமாக இருதயத்தில் ஒரு பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால் அந்த நோயைத் தீர்க்க முடியாது. அந்த கருவுற்ற பெண்ணுக்கு புற்றுநோய் இருக்கிறது என்று சொன்னாலும் அந்த நோயை பூரணமாக குணப்படுத்த முடியாது. ஆனால் இவை இரண்டுக்கும் மேலாக இப்போது புதிதாக எய்ட்ஸ் என்று சொல்லக்கூடிய ஒரு நோய் இந்த சமுதாயத்தில் பரவிக்கொண்டிருக்கிறது. சிலபெண்கள் கருவுற்ற 5,6 மாதங்கள் கடந்து ஆஸ்பத்திரிக்கு வந்து தன்னுடைய ரத்தத்தைப் பரிசோதனை செய்கிறபோதுதான் அவர்களுக்கு அந்த நோய் இருப்பது புலப்படுகிறது. இப்போது இருக்கிற சூழ்நிலையில் எல்லா வானொலிப்பெட்டிகளிலும் சரி, எல்லா விளம்பரப் பலகைகளிலும் சரி எய்ட்ஸ் என்றால் அதைத் தீர்க்க முடியாத நோய் என்று விளம்பரம் வேறு செய்து கொண்டிருக்கிறோம். இப்படி செய்து கொண்டிருக்கக்கூடிய அந்த விளம்பரத்தால் அந்த கருவுற்ற தாயினுடைய மனநிலை எவ்வளவு தூரம் பாதித்து இருக்கும் என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். அதுமட்டுமல்ல, எய்ட்ஸ் நோய் பாதித்த ஒரு தாய்க்கு அந்த தாயினுடைய வயிற்றில் இருக்கக்கூடிய குழந்தைக்கும் அந்த நோய் வரும் என்பது நூற்றுக்கு நூறு உண்மை. ஆகவே, அந்த தாயினுடைய மனநிலை என்னோடு இது போவது இல்லை. எனக்குப் பின்னர் பிறக்கிற குழந்தைக்கும் இந்த எய்ட்ஸ் நோய் வருமே, அதனுடைய எதிர்காலம் என்ன என்பது பெரிய கேள்விக் குறியாக இருக்கும். அப்படிப்பட்ட நோயாளிகளுக்குதான் இந்த Re-assurance

and Psycho- Prophylactic Approach என்பது மிகவும் பொருந்தும். அந்த வகையில் அப்படிப்பட்ட நோயாளிகளுக்கு எப்படி ஒரு ரீ-அஷ்யூரன்ஸை அரசு வழங்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தவிர்க்கமுடியாத, அல்லது குணப்படுத்த முடியாத நோய்கள் இருக்குமானால் அவர்களுக்கு அதை தெரிவித்துதான் ஆகவேண்டும். இப்போது எய்ட்ஸ் இருக்கிறது என்று சொன்னால் எய்ட்ஸ்-ஐ பொறுத்தவரையில் பரிசோதித்து அந்த நோயாளிகளுக்கு அதை நாம் தெரிவிப்பது கிடையாது. அவர்களுக்கு அது தெரியவேண்டாம் என்றுதான் மத்திய அரசு முடிவு எடுத்திருக்கிறது. இதை பரிசோதிக்கிறபோது எய்ட்ஸ் இருக்கிறது என்று தெரிந்தாலும் கூட அந்த நோயாளிகளுக்கு அதைத் தெரிவிக்க வேண்டாம் என்ற ஒரு கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே மாறுபட்ட கருத்து இருக்கிறது. தெரிவிக்கவேண்டும் என்று சிலரும், தெரிவிக்கக்கூடாது என்று சிலரும் தெரிவிக்கிறார்கள். ஆனால் இதைப் பொறுத்தவரையில் எய்ட்ஸ்ஸால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் அவர்களுடைய குழந்தைகளுக்கும் வரும் என்பது உண்மை என்ற காரணத்தால் அவர்களுக்கு அதை எல்லாம் சொல்லுகிற கடமை, நான் ஏற்கெனவே சொன்னபடி மருத்துவர்களுக்கு முழுமையாக இருக்கிறது. எனவே, அரசாங்கம் அதற்காக ஒரு உத்தரவு போடவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் செய்கிற பணியில் இதுவும் ஒரு பகுதி. எனவே, இந்த ஒரு பகுதிக்கு தனியாக அரசாங்கம் உத்தரவு போட வேண்டிய அவசியம் இல்லை. எனவேதான் நான் ஏற்கனவே சொன்னேன். மருத்துவர்கள் படிக்கிறபோதே இத்தனைக்கும் சேர்த்துதான் படிக்கிறார்கள். மருத்துவ சிகிச்சை கொடுப்பதற்கு மட்டும் அல்ல. ஒரு நோயாளிக்கு எப்படி அவருக்கு தைரியத்தை ஏற்படுத்துவது, ஒரு நோயாளிக்கு எப்படி சமாதானத்தைக் கொடுப்பது இத்தனைக்கும் அவர்கள் சேர்த்துதான் படிக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அத்தனையும் ஒவ்வொரு மருத்துவருக்கும் தெரிந்து இருக்கவேண்டும். அது தெரியாமல் இருந்தால் அவர் பாதி மருத்துவராகத்தான் கருதப்படுவார் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 366, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.